வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் நாராயணசாமி

தேதி 1.10.2023 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று இன்று நாடு முழுவதும் 7 லட்சம் இடங்களில் தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டது.
- பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தெலங்கானா மாநிலம் மகபூப் நகரில் ரூபாய் 13 ஆயிரத்து 500 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
- புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சி இணைந்து ஸ்வச்சத்தா ஹி சேவா நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இன்று பாண்டி ஸ்வச் மாரத்தான் போட்டியை நடத்தியது.
- நீலகிரி மாவட்டத்தில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

***<u>தூய்மை இந்தியா-</u>***

மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் தேதி கடந்த 2014-ஆம் ஆண்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி, தூய்மை இந்தியா திட்டத்தை தொடக்கி வைத்தார். அதன் 9-ஆம் ஆண்டு தினமான இன்று, நாட்டின் பல்வேறு இடங்களில் தூய்மைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுகுறித்து கடந்த மாதம் 24-ஆம் தேதி ஒலிபரப்பான பிரதமரின் 105-ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் அவர் பேசுகையில் காந்தி ஜெயந்தி

அன்று தூய்மை இயக்கம்  நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருவதாகவும், மத்திய அரசின் அனைத்து துறைகளிலும் தூய்மை இயக்கம் வேகம் பெற்றிருக்கிறது என்றும், குறிப்பிட்டார். இன்று காலை 10 மணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஸ்வச்சத்தா ஹி சேவா அபியானில் நடைபெற்ற மாபெரும் தூய்மை இயக்கத்தில் பிரபல உடற்பயிற்சி வல்லுனர் திரு அங்கித் பையன் புரியா-உடன் இணைந்து பங்கேற்று குப்பைகள் மற்றும் கழிவுகளை சுத்தம் செய்தார். பிரதமரின் அழைப்பின் பேரில் நாடு முழுவதும் சுமார் 7 லட்சம் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னதாக, மகாத்மாகாந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்று காலை 10 மணிக்கு தூய்மை இயக்கத்திற்காக 1 மணி நேரம் ஷ்ரம் தானில் ஈடுபடுமாறு நாட்டு மக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். நாடு முழுவதும் உள்ள சந்தை இடங்கள், ரயில் பாதைகள், நீர் நிலைகள், சுற்றுலா இடங்கள் மற்றும் வழிபாட்டு தலங்கள் உள்ளிட்ட பொது இடங்களை தூய்மை படுத்தும் நடவடிக்கையில் அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்றனர். தேசிய தலைநகரில் பாஜக தலைவர் திரு ஜே பி நட்டா, மத்திய அமைச்சர்கள் திரு பூபேந்திர யாதவ், திரு தர்மேந்திர பிரதான், டாக்டர் ஜிதேந்திர சிங், திரு ஹர்தீப் சிங் புரி, திருமதி மீனாட்சி லேக்கி, திரு ராஜீவ் சந்திரசேகர் மற்றும் பிற தலைவர்கள் இந்த இயக்கத்தில் பங்கேற்றனர். இந்தியாவில் உள்ள நகர்புற மற்றும் கிராமப்புறங்களில் இருந்து 6 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தளங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

*<u>ஆதித்யா எல்</u>*

இந்தியாவின் சூரிய பயணமான ஆதித்யா எல்-1 விண்கலம் புவியின் ஈர்ப்பு மண்டலத்தை விட்டு முழுமையாக விடுபட்டு சூரியனின் எல்-1 புள்ளியை நோக்கி சீரான வேகத்தில் செல்வதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. பூமியில் இருந்து 9.2 லட்சம் கிலோமீட்டர் தொலைவுக்கு அப்பால் பயணித்து

வெற்றிகரமாக புவியின் ஈர்ப்பு மண்டலத்தை கடந்து இப்படி ஒரு விண்கலத்தை அனுப்புவது இது 2-ஆவது முறையாகும். இதற்கு முன்னர் செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய செலுத்தப்பட்ட மங்கள்யான் விண்கலமும் பூமியின் ஈர்ப்பு மண்டலத்தை கடந்து சென்றது குறிப்பிடத் தக்கது. தொடர்ந்து புவியில் இருந்து 15 லட்சம் கிலோமீட்டர் தொலைவில் சூரியனின் எல்-1 பகுதிக்கு சென்றதும் விண்கலம் அதை மையமாகக் கொண்ட சூரிய ஒளிவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட உள்ளது. அங்கிருந்தபடியே சுற்றுப் பாதையில் வலம் வந்தவாறு சூரியனின் கரோனா மற்றும் போட்டோ ஸ்பியர், குரோமோஸ்பியர் பகுதிகளை ஆய்வு செய்யும்.

*<u>தெலங்கானா-மோடி</u>*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தெலங்கானா மாநிலம் மகபூப் நகரில் ரூபாய் 13 ஆயிரத்து 500 கோடி மதிப்பிலான பல வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, அவர் நாட்டிற்கு அர்ப்பணித்தார். சாலை, ரயில், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் உயர்கல்வி போன்ற முக்கியமான துறைகளின் வளர்ச்சி திட்டங்களுக்கும் இந்நிகழ்ச்சியின் போது பிரதமர் காணொளி காட்சி மூலம் கொடி அசைத்து தொடக்கி வைத்தார். நாடு முழுவதும் நவீன சாலை உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பிரதமரின் தொலைநோக்கு பார்வைக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் பல சாலை திட்டங்களுக்கும் இந்நிகழ்ச்சியின் போது அடிக்கல் நாட்டினார். மேலும், ஐதராபாத் பல்கலைக்கழகத்தின் 5 புதிய கட்டடங்களையும் அவர் திறந்து வைக்கிறார்.

## தூய்மை-பாண்டி

தூய்மை இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாக புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 40-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தூய்மையே சேவை இயக்கத்தில் ஈடுபட்டனர். தூய்மைக்காக 1-ஆம் தேதி, 1 மணி நேரம், ஒன்றாக இணைவோம் என்ற முன் முயற்சிக்கு ஏற்ப தூய்மைப் பணியில் ஈடுபட்டனர்.

நமது பாண்டி தூய்மை என்பது புதுச்சேரியை இந்தியாவின் தூய்மையான கடலோர நகரங்களில் ஒன்றாக மாற்றும் பணியாகும். இதில் உள்ளூர் நிர்வாகம் மற்றும் பிற அமைப்புகளின் ஆதரவுடன் நகரில் கல்வி வளாகங்களில் பூஜ்ய கழிவு முன் முயற்சி என்ற கழிவுகளற்ற இயக்கம் தொடங்கப்பட்டது. இதன் மூலம் குருமாப்பேட் குப்பைக் கிடங்கில் இருந்து ஈரமான மற்றும் உலர்ந்த கழிவுகளை முறையாக மாற்றி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தனர். ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு நீலத் தொட்டி, மற்றும் 2 உரத் தொட்டிகளைக் கொண்ட ஜீரோ வேஸ்ட் கிட் எனப்படும் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் செயல்முறை சாதனங்களை வழங்குவதற்கு முன்பு விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டு இதனை பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

## புதுச்சேரி-மாரத்தான்

புதுச்சேரி மற்றும் உழவர்களை நகராட்சி இணைந்து ஸ்வச்சத்தா ஹி சேவா, நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இன்று பாண்டி ஸ்வச் மாரத்தான் போட்டியை நடத்தியது. புதுச்சேரி கடற்கரை சாலையில் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் முன்னிலையில் சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாரத்தான் ஓட்டப் பந்தையத்தை கொடி அசைத்து தொடக்கி வைத்தார். இதில் ஆண், பெண் மற்றும் திருநங்கைகள் என சுமார் 700 பேர் கலந்து கொண்டனர். இதில் பங்கேற்று புல்வார் தெருக்களில் சிறந்த முறையில் 5 கிலோ மீட்டர் தூரத்தை ஓடி

நிறைவு செய்த போட்டியாளர்களுக்கு புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்காமி, பரிசுகளை வழங்கினார். பின்னர் துப்புரவு கருவிகளை வழங்கி 1 மணி நேர தன்னார்வ துப்புரவு பணிகளைத் துவக்கி வைத்தார்.

<u>நீலகிரி-விபத்து</u>

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் இருந்து மேட்டுப் பாளையத்திற்கு 59 பேருடன் திரும்பிக் கொண்டிருந்த சுற்றுலா பேருந்து குன்னூர் மலைப் பாதையில் சரிந்து, 100 அடி பள்ளத்தில் விழுந்த விபத்தில், அதில் பயணம் செய்த 9 பேர் உயிரிழந்தனர். மேலும் 30-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் நேரிட்ட உயிரிழப்பிற்கு குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டிருப்பதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி உள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து தலா ரூபாய் 2 லட்சமும், காயம் அடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் கருணைத் தொகையாக வழங்கப்படும் என்று, பிரதமர் அறிவித்துள்ளார்.

<u>2 ஆயிரம் ரூபாய்</u>

2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளின் பயன்பாட்டை நிறுத்தும் நோக்கில் அவற்றை திரும்ப பெறப் போவதாக, கடந்த மே மாதம் 19-ஆம் தேதி ரிசர்வ் வங்கி அறிவித்து இருந்தது. கருப்பு பணத்தை ஒழிக்கும் நோக்கில் 2 ஆயிரம் ரூபாயை வெளியிட்டதற்கான நோக்கம் நிறைவேறி விட்டதால் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக ரிசர்வ் வங்கி தெரிவித்தது. பொது மக்கள் வங்கியில் 2 ஆயிரம் ரூபாய் ரூபாய் நோட்டுகளை மாற்றிக் கொள்ள கடந்த

செப்டம்பர் 30-ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கி இருந்த நிலையில் தற்போது அக்டோபர் 7-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 8—ஆம் தேதி முதல் வங்கிகள் 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை பெறாது என்றும் தேவைப்படுவோர் ரிசர்வ் வங்கி அலுவலகங்கள் மூலம் மாற்றிக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது. நோட்டுக்களை இந்தியா போஸ்ட் மூலமாக ரிசர்வ் வங்கி அலுவலகங்களுக்கு அனுப்பி மாற்றலாம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

*__மாலத் தீவு அதிபர்__*

மாலத் தீவு அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் முகமது முய்சுவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, சமூக ஊடக பதிவில் வாழ்த்து தெரிவித்துள்ளார். அதில் அவர் மாலத் தீவு-இந்தியா இருதரப்பு உறவை வலுப்படுத்தவும், இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் நமது ஒட்டு மொத்த ஒத்துழைப்பை மேம்படுத்தவும் இந்தியா உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

__சிவாஜி-புதுவை__

நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசனின் பிறந்த நாள் இன்று புதுச்சேரி அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. இதனை ஒட்டி, கிழக்கு கடற்கரை சாலை-கருவடிக்குப்பம் சாலை சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு கே எஸ் பி ரமேஷ் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**சிவாஜி**

தென்னிந்தியாவின் திரைப்பட நட்சத்திரமாகவும், சர்வதேச திரைப்பட விழாவில் விருது பெற்ற முதல் இந்திய நடிகர் என்ற பெருமையை கொண்ட நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசனின் 96-ஆவது பிறந்த நாளில் அவரின் சாதனைகளை நினைவு கூர்ந்து போற்றி வணங்குவதாக மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் மற்றும் தகவல் ஒலிபரப்பு துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களை திரைப்படங்கள் மூலம் நம் கண் முன்னே கொண்டு வந்த பெருமை நடிகர் திலகத்தையே சாரும் என்று அவர் மேலும் கூறி உள்ளார்.

**ஆசிய விளையாட்டு போட்டி**

ஹாங்சோவில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023-ன் 8-ஆம் நாளான இன்று இந்தியா மேலும் 2 தங்கம் மற்றும் 2 வெள்ளி 1 வெண்கலப் பதக்கம் என 45 பதக்கங்களை பெற்று தரவரிசையில் 4-ஆம் இடத்தில் உள்ளது. மொத்தம் 13 தங்கம், 16 வெள்ளி, 16 வெண்கலப் பதக்கங்கள் இதில் அடங்கும்.